## ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

## இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

## 2024-01-07

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 60: 1-6,

*திருப்பாடல்* 72: 1-2. 7-8. 10-11. 12-13,

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 3: 2-3*ய*,5-6,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 2: 1-12)

***திருப்பலி முன்னுரை***

*நல்ல உள்ளங்களே நல்வாழ்த்துகள். ஆண்டின் முதல் ஞாயிறு. பராம்பரியமாகக் கொண்டாடப்பட்டு வரும் இந்த அற்புத திருவிழா வழிபாட்டுக்கு உங்களை வரவேற்கின்றோம். தன்னைத் தரணிக்கு காட்சியாக்கினார். பல இடங்களில் இருந்து புறப்பட்டு வந்தவர்களை விண்மீன் கொண்டு வழிநடத்திய அற்புதம் இன்று நினைக்கப்படுகின் து. காணிக்கைகள் கொணர்ந்து தங்களது மரியாதைகளை வெளிக்காட்டி நிற்கின்றார்கள். குழந்தையாய் இருந்த போதிலும், அவரே மெசியா என்பதனை தெரிந்து அறிந்திருந்ததாலும், தெண்டனிட்டு வணங்கி ஆராதிக்க முற்பட்டனர். நம்மையும் யொலிக்கச் செய்யும் நட்சத்திரங்களாக, அவரே நம்மை ஆசீர்வதிக்கின்றார். வழிநடத்துகின்றார். நாமும் அவரது சாட்சிகளாவோம். அவரிடமிருந்து பெற்றவைகளை அவருக்குக் காணிக்கையாக்குவோம். அவரே ஆண்டவராகிய மெசியா என்று வணங்கி ஆராதிப்போம். வாருங்கள். பங்கேற்றுப் பலன் பெறுவோம்.*

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*யூதர்களின் அரசரே இறைவா!*

*பிரபஞ்சத்திற்கு சுடர்விடும் விண்மீனாக திருஅவை துலங்க, பொறுப்பாளர்களை ஆசீர்வதித்து, வழிநடத்த, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*தாயும் தந்தையுமான இறைவா!*

*இப் புதிய ஆண்டிலே புதிய மனிதர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் இறையாட்சியின் மதீப்பிடுகளை உணர்ந்து அதன்படி அர்த்தமுள்ள புதுவாழ்வு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!*

*புதிய ஆண்டில் நாங்கள் செய்யும் தொழிலை ஆசீர்வதியும். எங்கள் குடும்பத்தில் சமாதானம் நிலவவும், எங்கள் செயல்கள் உமக்கு உகந்தவைகளாய் மாறவும், எங்கள் அருகில் வாழும் மக்களின் தேவைகள் நிறைவேறவும், தேவையான அருளைப் பொழிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*நீதியின் அரசனாம் எம் இறைவா!*

*நீர் மக்களை நீதியோடும், இரக்கத்தோடும் வழி நடத்தியதைப்போல நாங்களும் பிறரின் தவறுகளை கண்டு குறை கூறாமல் நீதியோடும், இரக்கத்தோடு வாழ வேண்டிய அருளை பொழிய வேண்டும் என்று மன்றாடுகிறோம்.*

*எழு ஒளிவீசு என்ற இறைவா!*

*நாங்கள் பல்வேறு பாரங்களால் விழுந்து கிடக்கின்றோம். நாங்கள் எங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையோடு எழுந்து ஒளி வீச வேண்டிய அருளைப் பொழிய வேண்டும் என்று மன்றாடுகின்றோம்.*

*கருணையின் உருவே இறைவா!*

*நாங்கள் ஏழை எளிய மக்கள் மேல் அன்பு கொண்டு வாழவும், அவர்களின் தேவைகளில் உடனிருக்கவும், பிறரின் துன்பங்களைத் தன் துன்பங்கள் போல் ஏற்று வாழவும் வரமருள வேண்டும் என்று மன்றாடுகிறோம்.*

*துன்பத்தில் ஆறுதல் தரும் இறைவா!*

*நோயினால் அவதிப்படுகின்ற உம் மக்களைக் கண்ணோக்கிப்பாரும். நீர் அவர்களின் துன்பத்தில் ஆறுதலாக இருந்து, நோயிலிருந்து விடுதலை கொடுக்கவும் வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*